செ.வெ.எண்: 498

<u>அரசு செய்தி வெளியீடு – 8–8–2007</u>

## கனிமவளங்களைப் பற்றிய உண்மை நிலைமைகளை உணர்ந்து கொள்வீர்! முதலமைச்சர் கலைஞர் அறிக்கை.

1996–2001ஆம் ஆண்டுகளில் தி.மு.கழக ஆட்சி இருந்த போது, நீதியரசர் திரு. ரெத்தினவேல் பாண்டியன் மற்றும் திரு. சீத்தாராமதாஸ், ஐ.ஏ.எஸ்., ஆகியோரைக் கொண்ட குழு ஒன்றினை அமைத்து, தென் மாவட்டங்களின் வறண்ட நிலையைப் போக்கி வளம் ஏற்படுத்த, அவர்கள் அளித்த கருத்துக்களின் அடிப்படையில், அந்த மாவட்டங்களின் தொழில் வளர்ச்சிக்காகவும், வேலை வாய்ப்புகளுக்காகவும், பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் இந்த அரசு, மதுரையில் – "சிப்காட்" தொழில் வளாகம், "டைடல்" தகவல் தொழில்நுட்பப் பூங்கா; விருதுநகரில் – ஏற்றுமதித் தொழில் மையம்; நெல்லையில்–நாங்குநேரி உயர்தொழில்நுட்பப் பூங்கா, "டைடல்" தகவல் தொழில்நுட்பப் பூங்கா; குமரியில்– குளச்சல் துறைமுகம்; ஆகிய திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்திட முனைந்திருக்கிறது. மத்தியிலுள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசும் நமது கோரிக்கையை ஏற்று, தூத்துக்குடி துறைமுக விரிவாக்கம், சேதுசமுத்திரத் திட்டம் ஆகியவற்றை நிறைவேற்றிட முன்வந்திருக்கிறது. இதன் ஒருகட்டமாகத் தான் சாத்தான்குளம் பகுதியில் இல்மனைட் என்ற கனிமத்திற்கு மதிப்பூட்டி பெயிண்ட் தயாரிக்கப் பயன்படும் டைட்டானியம் டைஆக்சைடு தொழிற்சாலை ஒன்றை நிறுவிட டாடா நிறுவனத்துடன் தமிழக அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

நெல்லை, தூத்துக்குடி, குமரி மாவட்டங்களில் கனிம வளங்கள் பெருமளவுக்கு நிறைந்துள்ளன. இந்தக் கனிம வளங்களைப் பயன்படுத்திக் கொள்ள இப்போது தான் முதல்முறையாக முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதைப் போலவும், அதற்காகவே டாடா நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதைப் போலவும், இந்த முயற்சி நிறைவேறுமானால் சாத்தான்குளம் பகுதி பெருமளவுக்குப் பாலைவனமாகி எதற்கும் பயன்படாமல் பாழாகிவிடும்

என்பதைப் போலவும் ஒருசிலர் உள்நோக்கத்துடன் மக்களைத் திசைதிருப்பும் பிரச்சாரத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்த மூன்று மாவட்டங்களிலும் கார்னெட், இல்மனைட், ரூட்டைல், சிர்கான், சில்மனைட் போன்ற கனிம வளங்கள் உள்ளன. இக்கனிம வளங்களைப் பிரித்தெடுப்பதற்கான சுரங்கத் தொழில் கடந்த 39 ஆண்டுகளாகவே, அதாவது 1968ஆம் ஆண்டிலிருந்தே நடைபெற்று வருகிறது. அரசு 59 குத்தகைகளுக்கான அனுமதிகளை வழங்கியிருக்கிறது. வி.வி.மினரல்ஸ், டிரான்ஸ்வேர்ல்ட் கார்னெட், பீச் மினரல் சாண்ட் கம்பெனி, இந்தியன் கார்னெட் சாண்ட் கம்பெனி, சதர்ன் எண்டர்பிரைசஸ், இந்தியன் ரேர் எர்த்ஸ் லிமிடெட் ஆகிய நிறுவனங்களும், எம்.ரமேஷ், கே.தங்கராஜ் ஆகிய தனியாரும் கனிமங்களைப் பிரித்தெடுத்துப் பெருமளவுக்கு வருவாய் ஈட்டி வருகின்றன. எனவே, டைட்டானியம் டைஆக்சைடு தொழிற்சாலையை இந்தப் பகுதியில் டாடா நிறுவனம் உருவாக்குமானால்; ஏற்கனவே பல்லாண்டுக் காலமாக கனிமவளங்களைப் பிரித்தெடுத்துத் தொழில் செய்து வரும் நிறுவனங்களின் வரிசையில் ஒன்றாகத் தான் இருக்க முடியுமே தவிர, டாடா நிறுவனமே முதல்முறையாக கனிமவளத்தைப் பிரித்தெடுக்கும் நிறுவனம் என்று சொல்வதில் அடிப்படை உண்மை ஏதும் கிடையாது.

தூத்துக்குடி மாவட்டத்தில் மொத்தம் 468 வருவாய்க் கிராமங்கள் இருக்கின்றன. அவற்றுள் ஏழு கிராமங்களை மட்டுமே உள்ளடக்கி இந்த டைட்டானியம் டை ஆக்ஸைடு தொழிற்சாலை அமையவுள்ளது. குடியிருப்புப் பகுதிகளைத் தவிர்த்து இந்த ஏழு கிராமங்களில் மீதமுள்ள மொத்தம் நஞ்செய், புஞ்செய் மற்றும் புறம்போக்கு நிலங்கள் 27,800 ஏக்கர். இந்தப் பரப்பளவில் தான் சுமார் பத்தாயிரம் ஏக்கர் அளவிற்கு மார்க்கெட் விலையை அனுசரித்து, நிலத்தை எந்தவிதமான அரசு நிர்ப்பந்தமும் இல்லாமல் நில உரிமையாளர்களின் விருப்பத்தைப் பெற்று, அதன் பிறகு தான் பெற்றுக் கொள்ளப்படவுள்ளது. குறிப்பிட்ட இந்த பத்தாயிரம் ஏக்கரில், வேளாண்மைக்குரிய நஞ்செய் நிலம் என்பது வெறும் 345 ஏக்கர் மட்டுமே என்பது குறிப்பிடத் தக்கது.

இந்தப் பகுதிகளில் கனிமவளங்களைப் பிரித்தெடுப்பதால் அவை பாலைவனமாகிப் பயனற்றுப் போய்விடும் என்பதில் எள்முனையளவுக்குக் கூட அறிவியல் உண்மை கிடையாது. அப்படிச் சொல்வதில் உண்மை இருக்குமானால், பல்லாண்டுக் காலமாக கனிமவளங்கள் பிரித்தெடுக்கப்படும் பகுதிகள் அனைத்தும் பாழ்பட்டுப் போயிருக்கவேண்டும். அதுபோல் ஏதும் நிகழவில்லை என்பதிலிருந்தே செய்யப்படும் பிரச்சாரம் பொய்யானது என்பதை எளிதில் புரிந்து கொள்ளமுடியும்.

டாடா நிறுவனத்துடன் தமிழக அரசு செய்து கொண்டுள்ள ஒப்பந்தம் நல்லெண்ணத்தின் அடிப்படையில் வெளிப்படையாகவும், ஒளிவுமறைவற்ற முறையிலும் செய்து கொண்டுள்ள ஒப்பந்தமாகும். மக்களின் உணர்வுகளையும், எதிர்பார்ப்புகளையும், தேவைகளையும் அறிந்து, திட்டங்களைத் தீட்டி எப்போதும் செயல்பட்டு வரும் இந்த அரசு; எந்தக் காரியமும் மக்களுக்குக் கேடு விளைவிக்கக்கூடியது என்பதைக் கண்டறிந்தால், அதற்கேற்ப செயல்முறைகளை வகுத்துக் கொள்ளும் என்பது இந்த அரசின் நடைமுறைகளைப் பார்த்து வருவோர்க்கு நன்றாகவே தெரியும். அதனால் தான் அப்பகுதி மக்களின் கருத்து அறிவதற்காக அமைச்சர்கள்—அலுவலர்கள் கொண்ட ஆய்வுக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. எனவே, ஒரு சிலரால் தொடர்ந்து செய்யப்படும் பிரச்சாரத்தை—உண்மை நிலைமைகளை அறிந்து கொண்டுள்ள எவரும் ஒரு துளியும் நம்பமாட்டார்கள்! இந்தச் சூழ்நிலையில் அந்தப் பகுதி மக்கள் டைட்டானியம் தொழிற்சாலை அங்கே வருவதற்கும், இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாவதற்கும் எந்தவிதமான இடைஞ்சலும் செய்ய முன் வராமல், இதனை வரவேற்பார்கள் என்று நம்புவதோடு, அரசின் சார்பில் அனுப்பப் படும் குழுவினரிடம் இந்தத் திட்டம் நல்ல முறையில் நிறைவேறி, மக்களுக்கு பயன்படும் வகையில் அமைந்திட விருப்பு வெறுப்பின்றி தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திடுமாறு கோருகிறேன்.

*****

வெளியீடு
இயக்குநர்
செ.ம.தொ.இ
சென்னை-9